ஓலம் கேட்டதா அலை ஓசை கேட்டதா
நாங்கள் சாவில் வீழ்ந்த போது நீதி கேட்டதா
அழுது அழுது கரைந்த அவலம் உலகம் கேட்டதா

பொங்கும் அலையோரம் அட எங்கும் இனப் படுகொலையே
என்ன இது சாபம் துயர் சுமந்தோமே
நெஞ்சை பிளந்தாடும் பெரும் சோகத்தின் தொடர் கதையே
எங்கள் நிலம் எங்கள் வளம் இழந்தோமே
உடல்கள் சிதறி அழிந்த பொழுதும்
உணர்வை இழக்க வில்லையே

ஓலம் கேட்டதா அலை ஓசை கேட்டதா
நாங்கள் சாவில் வீழ்ந்த போது நீதி கேட்டதா

முற்றத்தில் எங்கள் சுற்றத்தில் கொத்துக் குண்டுகள் வீழ்ந்தது ஏனம்மா
யுத்தத்தில் குண்டு சத்தத்தில் எங்கள் இரவும்பகலும் தானம்மா
பதுங்கு குளிகள் எங்களின் குடிசையானதே
பசி கிடந்து நாழும் எங்கள் உயிர்கள்போனதே
அந்த காலம் கொடும் சோகம்
எங்கள் வாழ்வே தமிழ் ஈழம்
எங்கள் உறவெல்லாம் அழிவாகி உரிமைக்கு விலையானதே

ஓலம் கேட்டதா அலை ஓசை கேட்டதா
நாங்கள் சாவில் வீழ்ந்த போது நீதி கேட்டதா

அர்த்தத்தில் சிந்தும் ரத்தத்தில் எங்கள் தேசக்தின் சிலிர்ப்பை பாரம்மா
தேசத்தில் எங்கள் சுவாசத்தில் முளிளி வாய்க்கால் வலிமை போர்ரம்மா
நந்திக்கடலே சொல்லம்மா எங்கே அதிசயம்
நாங்கள் தேடும் அன்புத்தலைவன் மர்ம ரகசியம்
புலி ஆழும் நிலை வேகும்
அந்தக்காலம் வர வேண்டும்
இன்று இருள் சூழ்ந்த வாழ்வுக்கு இன வாழ்வு கலங்குதே

ஓலம் கேட்டதா அலை ஓசை கேட்டதா
நாங்கள் சாவில் வீழ்ந்த போது நீதி கேட்டதா
அழுது அழுது கரைந்த அவலம் உலகம் கேட்டதா

பொங்கும் அலையோரம் அட எங்கும் இனப் படுகொலையே
என்ன இது சாபம் துயர் சுமந்தோமே
நெஞ்சை பிளந்தாடும் பெரும் சோகத்தின் தொடர் கதையே
எங்கள் நிலம் எங்கள் வளம் இழந்தோமே
உடல்கள் சிதறி அழிந்த பொழுதும்
உணர்வை இழக்க வில்லையே

ஓலம் கேட்டதா அலை ஓசை கேட்டதா
நாங்கள் சாவில் வீழ்ந்த போது நீதி கேட்டதா

இசைதட்டு . வீழ்ந்த இடத்தில் வீரத்தின் தொடக்கம்
பதிவு . அகம் கலையகம்